06.11.2025

O.S.No.377/2013

வா.சா.1.திரு.அங்கமுத்து, த.பெ.லேட். பிச்சைபிள்ளை.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

1. நான் M.A.,L.L.B படித்துள்ளேன். டிரைவர் வேலை செய்கிறேன். 1ம் பிரதிவாதியான சோலை என்ற மாடம்மாள் எனக்கு உறவினர் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்களில் மேற்படி ஆவணங்கள் O.S.No.202/2000 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். அதேபோல், வா.சா.ஆ.6 கிரைய இரசீதும் O.S.No.202/2000 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் சரிதான். O.S.No.202/2000 என்ற வழக்கானது யாருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் பெருமாள் என்பவர் எனக்கு எதிராகவும், எனது உடன்பிறந்த சகோதரரான 1ம் வாதிக்கு எதிராகவும் தாக்கல் செய்திருந்தார். O.S.No.202/2000 என்ற வழக்கில் தீர்ப்பு சொல்லப்பட்டுவிட்டது என்றால் சரிதான். O.S.No.202/2000 என்ற வழக்கின் பிராது நகல், எதிர்வழக்குரை நகல், தீர்ப்புரை நகல் என் வசம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி, ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இந்த வழக்கிற்கு வேண்டாம் என்பதால் தாக்கல் செய்யவில்லை.

2. பொதுவாக, பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கும்போது, முழு கிரையத் தொகையும் கொடுக்கப்பட்டால் அந்த பொது அதிகார ஆவணத்திலேயே பொது அதிகார ஆவணம் ரத்து செய்யத்தக்கதல்ல என குறிப்பிடப்படும் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 பொது அதிகார ஆவணத்தில் அந்த ஆவணம் ரத்து செய்யத் தக்கதல்ல என்று எந்தவொரு குறிப்பும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3

ஆவணத்தில் பிரதிபிரயோஜனம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதேபோல், வரவு செலவுக் கணக்குகளை காண்பித்து ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

3. வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்கள் எழுதிக் கொடுக்கப்பட்ட 1995ம் ஆண்டு முதல் மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்ட 21.12.2011ம் ஆண்டு வரை பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில், எந்தவொரு வரவு செலவுக் கணக்கும் நான் கொடுக்கவில்லை என்றால் இல்லை. அனைத்து ஆவணங்களும் பணம் கொடுத்ததால் எங்கள் வசமே உள்ளது. வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்கள் ரத்து செய்யப்பட்ட 21.12.2011ம் தேதி வரை 1ம் வாதி கிரைய ஆவணமோ அல்லது அடமான ஆவணமோ பதியவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3, வா.சா.ஆ.4 ஆவணங்கள் 1ம் பிரதிவாதியால் ரத்து செய்யப்படும் வரை 1ம் வாதியால் செயல்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல.

4. O.S.No.202/2000 வழக்கானது பெருமாள் என்பவரால் நானும், 1ம் வாதியும் அவரது சொத்திற்கு இடைஞ்சல் செய்ததாக தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். O.S.No.202/2000 வழக்கில் பெருமாள் தாவா செய்த சொத்து இந்த வழக்கில் காண்பிக்கப்பட்ட சொத்திற்கு தென்புறம் உள்ள சொத்து என்றால் சரிதான். O.S.No.202/2000 வழக்கில் எங்கள் தரப்பில் மேற்படி சொத்து பாதை என்று கட்சி செய்யப்பட்டது என்றால் ஆமாம். O.S.No.202/2000 வழக்கு நடந்தபோது, 1ம் வாதி தாவா சொத்தின் ஏஜெண்டுதான் என்றாலும் உரிமையாளர் அல்ல என்றாலும் சரியல்ல. கிரைய இரசீது எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. O.S.No.202/2000 வழக்கை நான் 1ம் பிரதிவாதியின் முகவராக இருந்த நிலையில் நாங்களே

உரிமையாளர் போல் எதிர்வழக்காடினோம் என்றால் சரியல்ல. அந்த வழக்கு நடத்துவதற்காக 1ம் பிரதிவாதியிடமிருந்து இந்த வழக்கு சொத்தின் அசல் ஆவணங்களை வாங்கியுள்ளோம் என்றால் இல்லை. காசு கொடுத்து தான் வாங்கினோம். அந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி படிப்பறிவு இல்லாத நபர் என்பதால் நிறைய வெற்றுப் பேப்பர்களில் கையெப்பம் பெற்றுள்ளோம் என்றால் இல்லை.

5. வா.சா.ஆ.4 பொது அதிகார ஆவணம் பதியப்பட்ட அன்றே முழு தொகையும் செலுத்தியதாக வா.சா.ஆ.6 கிரைய இரசீதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.6ன் அடிப்படையில் முழு கிரையத் தொகையும் கொடுத்துவிட்டதாக சொல்லும்பட்சத்தில் வா.சா.ஆ.4 பொது அதிகாரம் எழுதிய அன்றே கிரைய ஆவணம் பதிவதற்கு சட்டப்படியான தடை எதுவும் இல்லை என்றால் சரிதான். ஏன் அன்றைய தேதியிலேயே பதிவு செய்யப்படவில்லை என்பதற்கான காரணம் வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலே குறிப்பிடப்படவில்லை என்றால் நம்பிக்கையின் அடிப்படையில் வாங்கிவிட்டோம் என்று இன்று வரை அப்படியேதான் உள்ளோம். வா.சா.ஆ.6 கிரைய இரசீதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை அன்றைய தேதியில் என்னிடமோ, 1ம் வாதியிடமோ இருந்தது என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவொரு ஆவணமும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

6. வா.சா.ஆ.6 கிரைய இரசீது 1895 என எழுதப்பட்டு 1995 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.6 கிரைய இரசீதில் எண்ணால் எழுதப்பட்ட தொகையும், எழுத்தால் எழுதப்பட்ட தொகையும் அடித்து திருத்தம் செய்யப்பட்டது என்றால் ஆமாம். வா.சா.ஆ.6

கிரைய ஆவணம் யாரால் எழுதப்பட்டது என்று குறிப்பு இல்லை என்றால் குறிப்பு உள்ளது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் Stamp–ல் ஒரு கையெழுத்தும், அதற்கு மேல் ஒரு கையெழுத்தும் உள்ளது என்றால் சரிதான். Stamp–ல் உள்ள மாடம்மாள் கையெழுத்தும், அதற்கு மேல் உள்ள கையெழுத்திற்கும் முற்றிலும் மாறுபாடு உள்ளது என்றால் என் முன்னால் தான் கையெழுத்திட்டார். வா.சா.ஆ.6 ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் மூலப் பத்திரமும், அனுபவமும் கொடுத்ததாக இடைசறுகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள எந்ததொகையும் 1ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 கிரைய இரசீது என்னாலும், 1ம் வாதியாலும், O.S.No.202/2000 வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. அந்த வழக்கில் வா.சா.ஆ.6 கிரைய இரசீது (பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டது) ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என அந்த வழக்கில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் அனுபவத்திலும், தாங்கள் இல்லை என்று O.S.No.202/2000 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் பெருமாள் என்பவர் தான் வழக்குப் போட்டார். நாங்கள் போடவில்லை. O.S.No.202/2000 வழக்கில் பெருமாள் என்பவர் கோரியபடி, நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கப்பட்டது என்றால் பெருமாள் கிரையம் வாங்கிய சொத்தைப் பொறுத்து அவருக்கு ஆதரவாக தீர்ப்பாகியுள்ளது. O.S.No.202/2000 வழக்கின் தீர்ப்புரை நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் மேற்படி உண்மை விவரங்கள் எல்லாம் தெரிந்துவிடும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்பதால் தாக்கல்

செய்யவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக 1ம் வாதிக்கு மட்டும் தான் பவர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

7. 1ம் பிரதிவாதி தாவா சொத்தை விற்பதற்கு முயற்சி செய்தபோது, நான் சட்டக் கல்லூரியில் படிக்கிறேன் என்றும், சொத்தை விற்று தருகிறேன் என்றும், ஆவணங்களை வாங்கியுள்ளேன் என்றால் நான் பணம் கொடுத்து கிரைய இரசீது எழுதிக் கொடுத்தது 1995ம் வருடம் ஆகும். நான் சட்டக் கல்லூரி படித்தது 2007ம் வருடம் ஆகும். 1ம் வாதியை, 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் வாதியை 1ம் பிரதிவாதிக்கு தெரியாது என்பதால் சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதியிடம் நான் தான் பேசினேன் என்றால் ஆமாம். என் தம்பி உடன் இருந்தார். 1ம் பிரதிவாதிக்கு, 1ம் வாதியை தெரியாது என்ற நிலையில் எதனடிப்படையில் அவரது பெயருக்கு பவர் எழுதிக் கொடுத்தார் என்றால் நான் முதல் நாள் மாலையில் பணம் கொடுத்தேன். ஆவணங்கள் அனைத்தையும் என்னிடம் கொடுத்தார். மறுநாள் 1ம் பிரதிவாதி, 1ம் வாதிக்கு பவர் எழுதிக் கொடுத்தார்.

8. வா.சா.ஆ.4 பவர் ஆவணத்தின் அடிப்படையில் இதுவரை கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பவர் வாங்கிவிட்டு கிரைய ஆவணமும் எழுதிக் கொடுக்காமல், கிரையத் தொகையும் கொடுக்காமல் 15 ஆண்டுகளாக இழுத்தடித்து வந்தார் என்றால் சரியல்ல. 30 ஆண்டுகளாக தாவா சொத்து எனது அனுபவத்திலேயே உள்ளது. மோசடியான ஆவணங்களை உற்பத்தி செய்து கொண்டு நானும், 1ம் வாதியும், 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்பட்டு வந்தோம் என்றால் சரியல்ல. எனவே, 21.12.2011ம் தேதியில் 1ம் பிரதிவாதி, 1ம் வாதிக்கு வா.சா.ஆ.4 மூலம் கொடுத்திருந்த பொது அதிகாரத்தை சட்டப்பூர்வமாக ரத்து செய்து

பொது அதிகார ரத்து ஆவணம் பதிவு செய்துள்ளார் என்றால் எங்களுக்கு முன் அறிவிப்பு கொடுக்காமல் ரத்து செய்துள்ளார். அவ்வாறு ரத்து செய்யப்பட்டதிலிருந்து 1ம் வாதிக்கோ, எனக்கோ எவ்வித சட்டப்பூர்வ உரிமையோ, அதிகாரமோ கிடையாது என்றால் சரியல்ல.

9. நானோ, 1ம் வாதியோ பிரதிவாதிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோமா என்றால் தாவா சொத்தை சுற்றி எழுப்பியிருந்த காம்பவுண்ட் சுவற்றை இடித்துவிட்டதால் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் பொய்யாக புகார் கொடுத்திருந்தால் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

10. வா.சா.ஆ.4 ஆவணம் ரத்து செய்யப்பட்ட பின்பு 12.10.2020ம் தேதி 3ம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் அது சட்டப்படி செல்லக்கூடியதல்ல. அதன்பேரில் 4, 5 பிரதிவாதிகள் தாவா சொத்தை கிரையம் பெற்று சர்வ சுதந்திரமாக அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம் /–
(திரு. பொ. மகாராஜன், M.L)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.